பகுதியும் இருக்கிறது. அங்கே குடிநீர் கஷ்டம் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே அந்தப் பகுதிக்கு தனியாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டினாலொழிய அங்கே குடிநீர் வசதி பெற இயலாத நிலையிலே இருக்கிற காரணத்தினாலே அந்தப் பகுதிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்று அமைத்துக் கொடுப்பீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

அதேநேரத்திலே இந்தக் கேள்வி என்பது ஆரம்ப காலத்திலே கொடுக்கப்பட்டது. இப்போது என்னுடைய தொகுதி முழுவதும் கடுமையான வறட்சியினாலே மழையில்லாத காரணத்தினாலே குடிநீர் பஞ்சம் அதிகமாக நிலவுகிறது. அது கரடுமுரடான பகுதி, எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. நேற்றுகூட நான் அமைச்சர் அவர்களிடத்திலே பேசுகிற நேரத்திலே குடிநீர் கஷ்டத்தைப்பற்றி தெளிவாக எடுத்துச் சொன்னேன். ஆகவே வறட்சிப் பகுதியான அந்தப் பகுதிக்கு சிறப்பு முன்னுரிமை அடிப்படையிலே குடிநீர் கஷ்டத்தைப் போக்குவதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது நெருப்பூர், தருமபுரி மாவட்டம் பற்றியது. வினா எண் 88, திரு. பெ. பழனியப்பன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

88—

மேம்பாலம்

***2596—திரு. பெ. பழனியப்பன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2001 செப்டம்பர் 13]

(அ) மொரப்பூர் தொகுதி, ஆலாபுரம் ஊராட்சிக்குட்பட்ட அம்மாபாளையம் வாணியாறு ஆற்றின் குறுக்கே இருக்கும் தரைப்பாலத்தை மேம்பாலமாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. பெ. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியாறு அணைக்கட்டிலிருந்து திறந்துவிடப்படும் உபரி நீரானது அம்மாபாளையம் அருகிலுள்ள தரைமட்டப் பாலத்தின் வழியாக அரூர் பெரிய ஏரியைச் சென்றடையும். அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் பெய்யும் வடகிழக்குப் பருவ மழை காலங்களில் இவ்வாறு திறந்துவிடப்படும் உபரி நீரால் பாப்பிரெட்டிப்பட்டி, பள்ளிப்பட்டி வழியாக மொரப்பூர் மற்றும் சர்க்கரை ஆலை போக்குவரத்து பெருமளவு பாதிக்கப்படுகிறது. எனவே இதை எப்படியாவது நிறைவேற்றிக் கொடுப்பார்களா என்பதை தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேம்பாலம் கட்ட வேண்டும் என்று ஒரு கேள்வியை இங்கே கேட்டிருக்கிறார்கள். அவர் கேட்ட வினாவிற்கு இங்கே என்னுடைய பதில் இல்லை என்று இருக்கிறது. இருந்தாலும் இந்த சேலம், திருப்பத்தூர், வாணியம்பாடி சாலை கி.மீ. 35/8-ல் பிரிந்து செல்லும் ஏ. பள்ளிப்பட்டு பெரம்பூர் என்பது இதர மாவட்டச் சாலை—*O.D.R. *ஆகும். இச்சாலையின் மொத்த நீளம் 24.60 கிலோமீட்டர் உள்ளது. இங்கே பயணிகள் போக்குவரத்து மிகவும் குறைவாக இருப்பதாலும், வெள்ள நேரத்திலே அதிகமான பாதிப்பு ஏற்படாத காரணத்தாலும் இந்தத் திட்டத்திற்கு ஏற்கெனவே அங்கே ரோடு சரி செய்வதற்காக நபார்டு மூலமாக* Project *16-ன்கீழ் ரூபாய் 158 இலட்சத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு தற்சமயம் பணி நடைபெற்று வருகிறது. மேற்கண்ட காரணத்தினாலும், இங்கே சிறு, சிறு பணிகள் நடைபெறுகின்ற காரணத்தினாலும்* Passenger Car Unit *என்ற வகையில் அங்கே வரும் போக்குவரத்து மிகவும் குறைவான சூழ்நிலையில் உள்ளதாலும் அங்கே பாலம் தேவையில்லை என்று கருதுகிறோம். அங்கே பாலம் அவசியம் தேவையென்றால் அங்கே போக்குவரத்து அதிகமாக*

இருக்க வேண்டும். அது மட்டும் அல்லாமல் அங்கே மழை நேரத்திலும் தண்ணீர் வடிந்து போவதற்கு ஏதுவாக வசதிகள் உள்ளதால் இந்த வினாவிற்கு நான் இல்லை என்ற பதிலை அளித்தாலும் மாண்புமிகு மாமன்ற உறுப்பினர் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இதுசம்பந்தமாக பரிசீலனை செய்வதற்கு நான் ஏற்கெனவே அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறேன்.

திரு. பெ. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் கூறியதைப் போல அந்தச் சாலைகள் இப்போது செப்பனிடப்பட்டு வருகின்றன. சாலைகள் செப்பனிடப்பட்டிருந்தாலும்கூட பஸ்கள் அந்த வழியே செல்வதற்கு அந்தப் பாலத்தை சரிசெய்தே ஆக வேண்டும். அம்மாபாளையத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் சர்க்கரை ஆலை உள்ளது. 3 கோட்டங்களைச் சார்ந்த அயோத்தியாபட்டினம், காடையாம்பட்டி, பாப்பிரெட்டிப்பட்டி பகுதி கரும்பு முழுவதும் அரவைக் காலமான செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்களில் சுமார் 18 கிலோமீட்டர் வரை சுற்றிச் செல்ல வேண்டியுள்ளது. அதேபோல சர்க்கரை ஆலைக்குத் தேவையான உபபொருட்கள், சர்க்கரை ஆலையிலிருந்து உற்பத்தியாகும் சர்க்கரை, கழிவு மற்றும் மொலாசஸ் போன்ற பொருட்களும் சரியான பால வசதி இல்லாததால் மழைக் காலங்களில் சுற்றிச் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. ஆகவே பள்ளிக் குழந்தைகள், விவசாயிகள் நலன்கள், எரிபொருள் சிக்கனம், கால விரையம், போக்குவரத்துப் பிரச்சினை இவற்றைத் தீர்க்க விரைவில் அம்மாபாளையம் அருகே இருக்கக்கூடிய தரைமட்ட பாலத்தை மேம்பாலமாக மாற்றிக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்; நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இது சம்பந்தமாக பரிசீலிக்கப்படும் என்று கூறியிருக்கிறேன்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிவபுண்ணியம், இது மொரப்பூர் பகுதி பற்றியது.

வினா எண் 89, திருமதி சி.எம். சூரியகலா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

2001 செப்டம்பர் 13]

போக்குவரத்துத் துறை அமைச்சருடைய கேள்வி தள்ளி வைக்கப்படுகிறது.

(ஆ) குறுகிய கால வினா

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குறுகிய கால வினா எண் 5, திரு. வை. சிவப்ுண்ணியம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.*

5—

மருத்துவமனை

12863—திரு. வை. சிவபுண்ணியம்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி அரசு தலைமை மருத்துவமனையின் தரம் உயர்த்தி, புதிய இடத்தில் 500 படுக்கை வசதியுடன் அனைத்து வசதிகளையும் கொண்ட மருத்துவமனை கட்டும் திட்டம் நிலுவையிலுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இவ்வாண்டு திட்டத்தில் சேர்த்து நிறைவேற்றித் தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி அரசு தலைமை மருத்துவமனைக்கு, புதிய இடத்தில் 500 படுக்கை வசதியுடன் அனைத்து வசதிகளையும் கொண்ட மருத்துவமனை கட்டும் திட்டத்திற்கு பதிலாக தற்போதுள்ள அரசு மருத்துவமனை வளாகத்திலேயே ரூ.2.90 கோடி உத்தேச மதிப்பீட்டில் கூடுதலாக 150 படுக்கை வசதி கொண்ட பிரிவு ஒன்றைக் கட்டித் தருவது பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. அரசின் நிதி நிலையைக் கருத்திற்கொண்டு இத்திட்டம் செயல்படுத்துவது பற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 1991-96 ஆம் ஆண்டு பொறுப்பிலே இருந்த காலத்தில் மன்னார்குடி அரசு